# சங்கிப் படையையே அழைத்துக்கொண்டு வந்தாலும், பா.ஜ.க.வால் இங்கு ஒன்றும் செய்ய முடியாது - இது தமிழ்நாடு! இது தமிழ்நாடு!

## திருவண்ணாமலையில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (14.12.2025) திருவண்ணாமலை, கலைஞர் திடலில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணி மற்றும் திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தின் சார்பில் “வெல்வோம் 200 படைப்போம் வரலாறு” என்ற நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. உடன் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், துணை முதல்வர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.

அவர்கள் பேச்சில் சொன்னதையெல்லாம், மக்கள் அவரவர்களின் ஊரில் எடுத்துச் சொன்னார்கள். திராவிட இனஉணர்வை வளர்த்தார்கள். தமிழை நசுக்க வந்த இந்தி ஆதிக்கத்தை விரட்டினார்கள்! அதனால்தான், “ஏ.. தாழ்ந்த தமிழகமே!” - என்று கவலைப்பட்ட காலத்தை மாற்றி, இப்போது, ”திரும்பிப் பாருங்கள் தமிழ் நாட்டை”-என்று சொல்லும் காலத்திற்கு வந்திருக்கிறோம்! அவர்களது ஜெனரேஷன் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்ததும், அவர்களின் உழைப்பையும் - தியாகத்தையும் - கொள்கை உணர்வையும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் சிந்தித்து, எண்ணி உருவாக்கியது தான், இந்த இளைஞரணி!

### கழக இளைஞர் அணியைத் தொடங்கி வைத்து - தலைவர் கலைஞர் எழுப்பிய முழக்கம்!

1980 ஜூலை 20-ஆம் தேதி, மதுரை ஜான்சிராணி பூங்காவில், இளைஞரணியைத் தொடங்கினோம்! அந்தக் கூட்டத்தில் பேசிய தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள்;

சோதனைகள் - வேதனைகள் - தோல்விகள் - அடக்குமுறைகள் - சிறைச்சாலைகள் - சித்திரவதைகள் எல்லாம் படைகூட்டி வந்தாலும், இந்தக் கழகம் அசைந்து விடாமல் - தொலைந்துவிடாமல் - மறைந்துவிடாமல் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் அடித்தளம் நம்முடைய அமைப்புமுறை! அதனுடன் நம்முடைய இலட்சியப் பயணம் சேர்ந்து தொடரும்” என்று முழங்கினார்.

இளைஞரணியை அறிவித்துவிட்டோம் என்று அமைதியாக இருந்துவிடவில்லை. இதற்கான கட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும் என்று, முதலில் ஐவர் குழுவையும் அடுத்து ஏழு பேர் குழுவையும் தலைமைக் கழகம் நியமித்தது. அந்தக் குழுவில் நான், நாடாளுமன்றத்தில் கர்ஜித்துக் கொண்டிருக்கும் திருச்சி சிவா - வாலாஜா அசேன் - பரிதி இளம்வழுதி - தாரை மணியன் - ஜெயம் ஜூலியஸ் - பஞ்சவர்ணம் ஆகியோர் இருந்தோம்!

### கொள்கைகளை கூர்படுத்தினோம்! மக்களைச் சந்தித்து கழகம் வளர்த்தோம்!

நாங்களும் தமிழ்நாடு முழுவதும் ஊர் ஊராக, கிராமம் கிராமமாக, தெரு தெருவாகச் சென்றோம்! இளைஞர்களைச் சந்தித்தோம்! கழகத்தின் கொள்கைகளை எடுத்துச் சொன்னோம்! தந்தை பெரியார் மன்றம் - அறிஞர் அண்ணா மன்றம் - சிட்டிபாபு மன்றம் - எம்.ஆர்.ராதா மன்றம் - சத்தியவாணி முத்து மன்றம்- கலைஞர் படிப்பகம் - அஞ்சுகம் படிப்பகம் - டாக்டர் நடேசனார் படிப்பகம் - டி.எம்.நாயர் வாசகர் வட்டம் - சர். பிட்டி தியாகராயர் வாசகர் வட்டம் என்று ஊர் ஊருக்கு மன்றங்களை அமைத்து கொள்கைகளைக் கூர்படுத்தியதோடு, மக்களையும் சந்தித்து கழகத்தை வளர்த்தோம்!

### கழகத்தின் இலட்சியப் பயணத்திற்குத் துணை நின்ற இளைஞர் அணி!

சரி, உதயநிதி இவ்வளவும் செய்கிறார்... அப்படி என்றால், அடுத்து நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அதைப் பற்றிக் கூட உதயநிதி இங்கே சொன்னார்.

### தமிழ்நாட்டை உயர்த்தும் – கழகத்தின் பாதை!

நம்முடைய லெகசியை, மக்களிடம் கொண்டு சென்று சேர்க்க வேண்டும்! கழகத்தை வளர்க்கும் பணியில் கொள்கையை விதைக்கும் பணியில் ஈடுபட வேண்டும்! காலையில் ‘முரசொலி’ படித்த பிறகு, அதில் வெளியாகியிருக்கும் கட்டுரைகள், கருத்துகள், தலையங்கங்கள், திராவிட இயக்கப் பார்வைகள் என்று எல்லாவற்றையும் உங்களால் முடிந்த அளவிற்கு எல்லோரிடமும் கொண்டு செல்லுங்கள்! அவை எல்லாவற்றையும் சுருக்கமாக இன்றைய இளைஞர்களுக்குப் புரியும் வகையில், கிரியேட்டிவாக மாற்றி உங்களுக்கு என்று ஒரு ஸ்டைலில் பேசி, எழுதிக் கொண்டு செல்லுங்கள்! அவர்களுக்கு விழிப்புணர்வையும் - தெளிவையும் ஏற்படுத்தி தமிழ்நாட்டை உயர்த்தும் கழகத்தின் பாதையில் அவர்களைக் கொண்டுவர வேண்டும்!

### பொய்களை மக்களிடம் கொண்டு செல்ல முயலும் வலது சாரிகள்!

இன்றைக்குத் தொழில்நுட்பம் எவ்வளவோ பெருகிவிட்டது! அதே அளவிற்கு, உங்களின் கடமையும் பெருகிவிட்டது! ஏன் என்றால், ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்துவிட்ட ஆணவத்தில், வலதுசாரி அமைப்புகளும் - பிற்போக்குச் சக்திகளும் மிகவும் வேகமாக முன்னெப்போதும் இல்லாத ஆக்ரோஷத்துடன் செயல்படத் தொடங்கியிருக்கிறார்கள்! வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பக்கூடிய மக்களிடம், பொய்களை - அவதூறுகளை - பிற்போக்கு எண்ணங்களை - தேன் தடவிய வார்த்தைகளில் கொண்டு சென்று சேர்க்க முயற்சி செய்கிறார்கள்.

### நமது கொள்கைகளைத் தீவிரமாகப் பரப்ப வேண்டும்!

எடுத்துக்காட்டுக்குச் சொல்கிறேன்... எல்லோரும் ஃபேமிலி, ஃப்ரண்ட்ஸ் வாட்ஸ்அப் குழுவில் இருப்பீர்கள். அதில், சொந்தங்கள் தங்களின் அன்பை - உணர்வை பரிமாறிக்கொள்வார்கள். ஆனால், அதில் ஒருவர் மட்டும், எதைப் பற்றியும் கவலைப்படாமல் விஷம் தோய்ந்த கருத்துகளை ஃபார்வர்ட் செய்வார். பலரும், எதையோ படிக்காமல் அனுப்பியிருக்கிறார் என்று கடந்து சென்று விடுவீர்கள். அதை அட்வாண்டேஜாக எடுத்துக் கொண்டு, அவரும் தொடர்ந்து ‘மெசேஜ்’ அனுப்புவார். அப்படிப்பட்டவர்களின் பிற்போக்குக் கருத்துகள் தொற்றுநோய் போன்று வேகமாகப் பரவும்! அதைத் தடுக்க வேண்டும் என்றால், அதற்கு மாற்று மருந்தான நம்முடைய கொள்கைகளையும் நாம் தீவிரமாகப் பரப்ப வேண்டும்!

### ஒட்டு மொத்த இந்தியாவையும் – பன்மைத்துவத்தையும் காக்க வேண்டிய கடமை!

பொய்யைப் பேசுவதற்கு ஒருவர் தயங்காத போது, உண்மையைப் பேசுவதற்கு நெஞ்சில் உரமிருக்கும் நாம் ஏன் தயங்க வேண்டும்! எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இப்போது நம்முடைய தோளில், தமிழ்நாட்டையும், தமிழ் மொழியையும் காக்க வேண்டிய கடமை மட்டுமல்ல. ஒட்டுமொத்த இந்தியாவையும் நாட்டின் பன்மைத்துவத்தையும் காக்க வேண்டிய கடமை இருக்கிறது!

இந்தியாவிலேயே பி.ஜே.பி.,க்கு எதிராக ஐடியாலாஜிக்கல் ஃபைட் (கருத்தியல் போர்) செய்து கொண்டு இருக்கும் ஒரே மாநிலக் கட்சி, தி.மு.க., தான்! அவர்களால் வெற்றி கொள்ள முடியாதது, நம் தமிழ்நாட்டை மட்டும்தான்! அதனால்தான் அமித்ஷா போன்றோருக்கு நம் மீது எரிச்சல்!

அண்மையில் கூட, என்ன பேசினார்? பீகாரை ஜெயித்துவிட்டோம், “அடுத்த டார்கெட் தமிழ்நாடுதான்” என்று சொல்கிறார்!

### அன்புடன் வந்தால் அரவணைப்போம் ஆணவத்துடன் வந்தால் எதிர்த்து நிற்போம்!

அமித்ஷா அவர்களே! நீங்கள் இல்லை, உங்கள் சங்கிப் படையையே அழைத்துக்கொண்டு வந்தாலும், உங்களால் இங்கு ஒன்றும் செய்ய முடியாது. இது தமிழ்நாடு! இது தமிழ்நாடு! எங்களின் கேரக்டரையே புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறீர்களே...! அன்புடன் வந்தால், அரவணைப்போம்... ஆணவத்துடன் வந்தால் அடிபணிய மாட்டோம்; எதிர்த்து நிற்போம்! உங்களை ஜெயித்துக் காண்பிப்போம்! மீண்டும் சொல்கிறேன். அன்புடன் வந்தால், அரவணைப்போம்... ஆணவத்துடன் வந்தால் அடிபணிய மாட்டோம்; எதிர்த்து நிற்போம்! உங்களை ஜெயித்துக் காண்பிப்போம்!

### மக்களுடன் இருப்பதுதான் அரசியல்!

இங்கு கூடியிருக்கும் இளைஞரணித் தம்பிகளுக்குச் சொல்கிறேன். ஒவ்வொரு தலைமுறைக்கு முன்பும் வரலாறு ஒரு கடினமான கேள்வியை முன்வைக்கும்! அதற்கு ‘ரியாக்ட்’ செய்ய முடியாமல், மண்டியிடுகின்றவர்களை, வரலாறும் மறந்துவிடும்! மக்களும் மன்னிக்க மாட்டார்கள்! ஆனால், வரலாறு முன்வைக்கும் கேள்விகளை எதிர்த்து, ஃபைட் செய்து வரலாற்றைத் திருத்தி எழுதுகின்றவர்களை, மக்களும் மறக்க மாட்டார்கள்! வரலாறும் மறக்காது! நீங்கள் எல்லாம் வரலாறு படைக்க வேண்டும்! அதற்கு எப்போதும் மக்களோடு மக்களாக இருக்க வேண்டும்.

### உதயநிதியிடம் நான் காணும் அயராத உழைப்பு!

மக்களுக்காக இருப்பதுதான் அரசியல்! அந்த அரசியலைச் செய்யத்தான், உங்கள் எல்லோருக்கும் பொறுப்புகள் வழங்கப்பட்டிருக்கிறது! மக்களிடம் செல்லுங்கள். அவர்கள் கூடவே வாழுங்கள். அவர்களுக்காகக் குரல் கொடுங்கள். இதுதான் உங்களுக்கான டாஸ்க்!

## “முரசொலி”யை நாள்தோறும் படியுங்கள்!

**கழகத்தை வளர்க்கும் பணியில் கொள்கையை விதைக்கும் பணியில் ஈடுபட வேண்டும்! காலையில் ‘முரசொலி’ படித்த பிறகு, அதில் வெளியாகியிருக்கும் கட்டுரைகள், கருத்துகள், தலையங்கங்கள், திராவிட இயக்கப் பார்வைகள் என்று எல்லாவற்றையும் உங்களால் முடிந்த அளவிற்கு எல்லோரிடமும் கொண்டு செல்லுங்கள்! அவை எல்லாவற்றையும் சுருக்கமாக இன்றைய இளைஞர்களுக்குப் புரியும் வகையில், கிரியேட்டிவாக மாற்றி உங்களுக்கு என்று ஒரு ஸ்டைலில் பேசி, எழுதிக் கொண்டு செல்லுங்கள்!**

அரசியலில் சொகுசு எதிர்பார்க்காதீர்கள். இங்கு கடுமையாக உழைப்பவர்களுக்குத்தான் இடம் கிடைக்கும்! அந்த இடம், கட்சிப் பொறுப்பில் மட்டுமல்ல; மக்கள் மனதிலும் நிரந்தரமாக இருக்கும்! பேரறிஞர் அண்ணா அவர்கள், தலைவர் கலைஞரின் உழைப்பைப் பாராட்டினார். தலைவர் கலைஞர் அவர்கள் என்னைப் பற்றிச் சொல்லும்போது “உழைப்பு... உழைப்பு... உழைப்பு” என்றுதான் சொல்வார். இப்போது நானும் தம்பி உதயநிதி அவர்களின் உழைப்பைப் பார்க்கிறேன். அதே உழைப்பைத்தான் உங்களிடமும் எதிர்பார்க்கிறேன். அந்த உழைப்புக்கு இளைஞரணிப் படை தயாரா?

### இளைஞர் அணி எனும் தாய்வீட்டைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!

தம்பி உதயநிதி பேசும்போது, “வரும் தேர்தலில் இளைஞரணிக்கு வாய்ப்புக் கொடுங்கள்!” என்று கேட்டார். அவருக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் நான் சொல்லிக்கொள்வது; இன்றைக்கு உள்ளாட்சியில், சட்டமன்றத்தில், அமைச்சரவையில், நாடாளுமன்றத்தில் நாட்டையே திரும்பிப் பார்க்க வைக்கும் அளவிற்குச் செயல்படும் பல பேர், இளைஞரணியில் இருந்து வந்தவர்கள் தான்! நாளைக்கு உங்களிலிருந்து பலரும், அந்த இடத்திற்கு வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நிச்சயம் வரத்தான் போகிறீர்கள்! அதற்குத் தயாராக, இளைஞரணி எனும் தாய் வீட்டை பயன்படுத்திக்கொள்ளுங்கள்!

இங்கே உதயநிதி சொன்னதுபோல, நீங்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் பத்து இளைஞர்களை உங்களுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும்! அவர்களுக்கு அரசியல் உணர்வை, நம்முடைய கொள்கைகளை, திராவிட மாடல் அரசின் சாதனைகளைக் கொண்டு செல்லுங்கள்! அவர்கள் ஒவ்வொருவரின் வாக்கும், அவர்கள் குடும்பத்தினரின் வாக்குகளும், அவர்கள் நண்பர்களின் வாக்குகளும் உதயசூரியனுக்கும், நம்முடைய கூட்டணிக் கட்சிகளின் சின்னங் களுக்கும் தான் கிடைக்க வேண்டும்!

### உலகத்திலேயே நமது சாதனைகள் போல் வேறு எங்கும் இல்லை!

கடந்தகால ஆட்சியாளர்கள், செய்த தவறுகளை, குற்றங்களை, துரோகங்களை மக்களுக்கு நினைவுபடுத்துங்கள்! அவர்கள் மீண்டும் வந்தால், தமிழ்நாடு என்னென்ன ஆபத்துகளைச் சந்திக்கும் என்று மக்களிடம் சொல்லுங்கள்! நாடே திரும்பிப் பார்க்கும் அளவிற்குத் தமிழ்நாட்டை முன்னேற்றியிருக்கும், நம்முடைய திட்டங்களைப் பற்றி எடுத்துச்சொல்லுங்கள். நான் உறுதியோடு சொல்கிறேன், நாட்டில், ஏன் உலகத்திலேயே எந்த ஆட்சியும் நாம் செய்திருக்கும் அளவிற்கு முத்திரைத் திட்டங்களைச் செய்திருக்க மாட்டார்கள்.

நீங்களே பார்த்திருப்பீர்கள்... நம்முடைய அரசின் திட்டங்களால் பயனடைபவர்களின் பேட்டிகளை, பல்வேறு ஊடகங்கள் வெளியிடுகிறார்கள். அப்படி, பேட்டி அளித்த ஒரு தாய் பேசினார்கள். தன்னுடைய பிள்ளைகள் பணம் அனுப்பவில்லை என்றாலும், தனக்குத் தேவையான மருந்து மாத்திரைகளை வாங்க, ‘கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்’ உதவியாக இருக்கிறது என்று சுயமரியாதை உணர்வுடன் பேசினார்கள்.

### மகளிர்க்குப் புது தன்னம்பிக்கை தரும் ‘மகளிர் உரிமைத் தொகை’

மற்றொரு பேட்டியில், பூ விற்கும் பெண் ஒருவர், “ஆயிரம் ரூபாயை வைத்து, பூ வாங்குகிறேன், ‘விடியல் பயணத்தில்’ சென்று அதை விற்றுவிட்டு வருகிறேன்... இதையெல்லாம் முதலீடாக மாற்றிச் சம்பாதிக்கிறேன் என்று சொன்னார்... இப்படி தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய, ஒரு கோடியே 30 இலட்சத்து 69 ஆயிரத்து 831 பெண்கள் தங்களின் பணத்தேவைக்கு மற்றவர்களை எதிர்பார்த்திருந்த காலம் சென்று, அக்கவுண்ட்டில் மாதா மாதம் பணம் வருவது, புது தன்னம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது!

### மாணவ – மாணவியர்க்குப் பெரிதும் பயன் தரும் கழக அரசின் திட்டங்கள்!

“கல்வியில் சிறந்த தமிழ்நாடு”, “வெல்லும் தமிழ்ப்பெண்கள்” போன்ற நிகழ்ச்சிகளை ஏன் நடத்துகிறோம்? நம்முடைய திட்டங்களின் பயனாளிகள் தங்களின் அனுபவங்களை, சக்சஸ் ஸ்டோரியை எல்லா மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காக நடத்துகிறோம். இன்னும் நிறைய சக்சஸ்ஃபுல் மனிதர்களை உருவாக்க வேண்டும். மகளிர் மாதிரியே, கல்லூரி செல்லும் மாணவர்கள், தங்களின் செலவைத் தாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லும் அளவிற்கு, அவர்களுக்கு துணையாக இருக்கும், ‘புதுமைப்பெண்’ மற்றும் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டங்களில் 12 இலட்சத்திற்கும் அதிகமான மாணவ - மாணவியர்கள் பயன்பெறுகிறார்கள்!

### ‘நான் முதல்வன்’ திட்டத்தில் வேலை கிடைத்து – பணிக்குச் செல்லும் இளைஞர்கள்!

அதுமட்டுமல்ல, பசியுடன் பள்ளிக்கு வந்து கொண்டிருந்த பிள்ளைகள் பலரும், இப்போது தினம் சூடாக, சுவையாக, சத்தாக காலை உணவு சாப்பிடும்போது, அவர்களின் அப்பா - அம்மா நிச்சயம் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினை நினைத்துப் பார்ப்பார்கள்!

‘நான் முதல்வன்’ திட்டத்தில் படித்து, நல்ல வேலைக்குச் செல்லும் இளைஞர்கள் எல்லாம் நம்முடைய திராவிட மாடலுக்கு நன்றி சொல்கிறார்கள்!


### எல்லா ‘சர்வே’ அறிக்கைகளிலும் தமிழ்நாடுதான் டாப்!

ஒவ்வொரு நாளும் யார் கையையும் எதிர்பார்க்காமல், ‘விடியல் பயணம்’ திட்டத்தில் பயணம் செய்துகொண்டிருக்கும் கோடிக்கணக்கான மகளிர், “இதுதான் எங்களுக்கான அரசு பஸ்” என்று பெருமைப்படுகிறார்கள்!

‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தில், வீட்டிற்கே வந்து மாத்திரை மருந்து வழங்கி பார்த்துக்கொள்வதால் நலமாக இருக்கும் 2 கோடியே 53 இலட்சத்து 49 ஆயிரத்து 475 பேரும், நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு எப்படி பெரும் அக்கறை எடுத்துப் பார்த்துக்கொள்கிறது என்று பாராட்டுவார்கள்!

இப்படி நம்முடைய திராவிட மாடல் அரசில், பட்டியலிட்டு, ஒவ்வொரு துறையிலும் சாதனைகளை “புத்தகம்”ஆகப் போடும் அளவிற்கு, தினமும் ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்! அதனால்தான் பொருளாதார வளர்ச்சியில், தமிழ்நாடு இந்தியாவிலேயே நம்பர் ஒன்! ஒன்றிய அரசு வெளியிடும் பல சர்வே அறிக்கைகளிலும் எல்லாவற்றிவற்றிலும் நம்முடைய தமிழ்நாடுதான், டாப்!

### அமைச்சர் எ.வ. வேலுவுக்கு தலைமைக் கழகம் சார்பில் நன்றி!



**அமைச்சர் வேலு அவர்களிடம் ஒரு வேலையைச் சொல்லி விட்டால், அதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை. அப்படி இந்தக் கூட்டத்தைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக் கூடிய வேலு அவர்களுக்கு என்னதான் தம்பி உதயநிதி நன்றி சொல்லியிருந்தாலும், தலைமைக் கழகத்தின் சார்பில், தலைவர் என்ற முறையில் நானும், நன்றி கூற விரும்புகிறேன்.**

### நமது பிரச்சாரத்தில் தனித்தன்மை வேண்டும்!

இந்தத் திட்டங்கள் எல்லாவற்றைப் பற்றியும், நீங்கள் விரல்நுனியில் வைத்துக்கொள்ள வேண்டும்! இவை எல்லாவற்றையும் ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சென்று சேர்க்க வேண்டும்! மற்ற கட்சிகள் எல்லோரும்தான் பிரச்சாரம் செய்வார்கள். ஆனால், அதிலிருந்து தனித்துத் தெரிவது போன்று உங்களுக்கு என்று ஒரு ஸ்டைல் இருக்க வேண்டும்!

### சுயமரியாதையை அடகுவைக்கும் – அடிமைச் சேவகம் செய்யும் கூட்டங்கள்!

வழக்கமாகத் தி.மு.க.,வுக்கு வாக்களிக்காதவர்கள் கூட, “இளைஞரணியின் பிரச்சாரத்தால் தான், தி.மு.க.வுக்கு வாக்களிக்கப் போகிறேன்” என்று சொல்ல வேண்டும்! அப்படியொரு தாக்கத்தை நீங்கள் உருவாக்க வேண்டும்!

தேர்தல் நெருங்கி வந்துவிட்டது. மக்களிடம் நீங்கள் சொல்லுங்கள். பத்தாண்டுகளில், தமிழ்நாட்டை படுபாதாளத்தில் தள்ளிய அ.தி.மு.க.வினர் தாங்கள் ஏதோ உத்தமர்கள் போல் வேஷம் போட்டுக்கொண்டு வந்து வாக்கு கேட்பார்கள்! அதேபோல், தமிழ்நாட்டிற்குத் துரோகம் செய்வதை மட்டுமே வழக்கமாக வைத்திருக்கும் பா.ஜ.க.வினர், வழக்கம்போல் தங்களின் பொய்ப் பரப்புரைகளையும் - பதற்றத்தை உண்டாக்கும் அரசியலையும் வைத்து, தேர்தலைச் சந்திக்கலாம் என்று வருவார்கள்! இவர்களிடம் கைகட்டி, வாய் பொத்தி, அடிமைச் சேவகம் செய்து, தமிழ்நாட்டின் உரிமைகளை தமிழர்களின் சுயமரியாதையை அடகு வைக்கலாம் என்று நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை செய்யப் பல கூட்டங்கள் இருக்கின்றன!

2026 தேர்தலில், மக்கள் முன்னால் இருக்கும் கேள்வி என்னவென்றால், “இன்னும் ஐம்பது ஆண்டுகள் முன்னோக்கி நடைபோடப் போகிறோமா? இல்லை, ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கி இழுக்க முயற்சி செய்பவர்களுக்கு அடிபணியப் போகிறோமா?” அந்தக் கேள்விக்கு மக்கள் அளிக்கப் போகும் விடை: “திராவிட மாடல் ஆட்சி 2.0” அதற்கு நீங்கள் எல்லோரும் கடுமையாக உழைக்க வேண்டும்!

### தமிழ்நாடு ‘நம்பர் ஒன்’ என சிங்க நடைபோட வேண்டும்!

ஏன் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்காலத்தில்தான், தமிழ்நாட்டின் எதிர்காலம், தமிழினத்தின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது! அந்த எதிர்காலம், வளம் நிறைந்ததாக, ஒளி நிறைந்ததாக தமிழ்நாடு நம்பர் ஒன் என்று சிங்கநடை போடுவதாக அமைய வேண்டும்!

### வெற்றிக்கான பயணத்தை இன்றே தொடங்குவோம்!

நீங்கள்தான் திராவிட மாடல் 2.0 அடித்தளமாக, இருக்க வேண்டும்! இருப்பீர்களா? இப்போது சொல்லுங்கள். நமது மிஷன் 2026 என்ன? “திராவிட மாடல் 2.0”

சத்தமாகச் சொல்லுங்கள்... திராவிட மாடல் 2.0 அந்த வெற்றிக்கான பயணத்தை, இன்றைக்கே தொடங்குங்கள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், திலி.தனி 127சூரங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் ரூ.48.50லட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகம் கட்டுதல் மற்றும் நவீனமயமாக்கல் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், சின்னமாரிமுத்து, ராமசுப்பு, அன்புராஜன், புதூர் ராதாகிருஷ்ணன், சூரங்குடி கூட்டுறவு சங்க முன்னாள் செயலாளர் ராமச்சந்திரன், கூட்டுறவு சார் பதிவாளர் முருகன், கூட்டுறவு சங்க செயலாளர் சுசிலா உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.